


# உறுதிபூசுதலின் தயாரிப்பு




## II. உறுதிப்பூசுதலின் பேரில்

க. ஞ. 363-370. 543.—M. J. M. VI. 56.—ஞ. சீ. 150. 211.—
ச. சி. 21.—D. C. III. 170.—ஞ. த. 456.

**†230. [85] உறுதிப்பூசுதல் ஆவதென்ன ?**

**நன்மைச் சத்திய வேதத்தில் திடப்படுத்துகிறதற்காக இஸ்பிரீத்துசாந்துவையும், அவருடைய வரப்பிரசாதங்களையும் நமக்குக் கொடுக்கிற தேவத்திரவிய அனுமானம்.**

**1. உறுதிப்பூசுதலை உண்டாக்கினவர் யார் ?**

யேசுநாதசுவாமிதான்.

**2. அதை எப்போது உண்டாக்கினார் ?**

அதை அவர் எப்போது ஏற்படுத்தினாரென்று சுவிசேஷத்தில் விவரிக்கப்படாவிடினும், அவர் உயிர்த்து மோட்சத்துக்குப் போவதற்கு முன் அதை உண்டாக்கினாரென்று நம்பவேண்டியது. உள்ளபடி அப்போஸ்தலர்கள் உறுதிப்பூசுதலை ஞானஸ்நானம் பெற்ற கிறீஸ்துவர்களுக்குக் கொடுத்துவந்தார்கள். அதை யேசுநாதர் ஏற்படுத்தியிராவிட்டால், அவர்கள் அதைக் கிறீஸ்துவர்களுக்குக் கொடுத்திருக்கவே மாட்டார்கள்.

**3. உறுதிப்பூசுதலின் பொருள் என்ன ?**

மேற்றிராணியார் தமது கரத்தை விரித்தலும், மேற்றிராணியாரால் மந்திரிக்கப்பட்ட "கிறீஸ்மா" என்னும் அர்ச்சியசிஷ்ட பரிமளத் தைலத்தால் பூசுவதும் பொருளாகும்.

4. உறுதிப்பூசுதலின் வார்த்தைகள் எவை ?

"பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துடையவும் நாமத்தினால் நான் சிலுவை அடையாளத்தினால் உன்னைக் குறிக்கிறேன் ; இரட்சணிய பரிமளத் தைலத்தால் உன்னை உறுதிப்படுத்துகிறேன்" என்னும் மந்திரம், வார்த்தைகளாகும்.

5. உறுதிப்பூசுதலைக் கொடுக்க அதிகாரம் பெற்றவர்கள் யார் ?

முன் சொன்னபடி உறுதிப்பூசுதல் கொடுக்கச் சாதாரண அதிகாரமுள்ளவர் மேற்றிராணியார்தான். ஆனால் மேற்றிராணியார் இல்லாத இடங்களிலே அர்ச். பாப்பாண்டவருடைய விசேஷ அதிகாரம் பெற்ற குருவானவர் உறுதிப்பூசுதலைக் கொடுக்கலாம். அன்றியும், அவஸ்தை சமயத்தில் அதைக்கொடுக்க ஒவ்வொரு பங்கு சுவாமியாருக்கும் கடமையுண்டு.

6. இரட்சணியம் அடைவதற்கு உறுதிப்பூசுதல் அத்தியாவசியமா ?

இல்லை ; என்றாலும் இதைப் பெறாதவர்கள் திரளான வரப்பிரசாதங்களை இழந்து, தங்கள் ஆத்துமத்துக்குப் பெரும் நஷ்டத்தை வருவித்துக்கொள்ளுகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் எவனாவது இதை அலட்சியஞ் செய்து பெறாதிருந்தாலும் சரி, இது விஷயத்தில் மற்றவர்களுக்குத் துர்மாதிரிகையாயிருந்தாலும் சரி, அது சாவான பாவமாகும்.

7. உறுதிப்பூசுதலைப் பெறுகிறவனுடைய ஆத்துமத்துக்கு உண்டாகும் நன்மைகள் என்ன ?

(1) அவனுடைய ஆத்துமத்திலுள்ள தேவ இஷ்டப்பிரசாதம் அதிகரிக்கிறது ;

(2) இஸ்பிரீத்துசாந்துவானவரும், அவருடைய ஏழு வரப்பிரசாதங்களும் அவனுடைய ஆத்துமத்துக்கு விசேஷ விதமாக கொடுக்கப்படுகின்றன ;

(3) சர்வேசுரனைச் சரியான விதமாய் அறிந்து, அவரைக் குறைவற நேசித்து, தர்ம வழியில் உத்தமமான விதமாய் ஒழுகுவதற்கான தைரியமும் அவனுடைய ஆத்துமத்துக்கு உண்டாகிறது. ஆகையால் சகல கிறீஸ்துவர்களும் இதைப் பெறக் கவலையாயிருப்பார்களாக.

8. உறுதிப்பூசுதல் வழியாக இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதங்கள் ஆத்துமத்துக்கு விசேஷ விதமாய்க் கொடுக்கப்படும் என்று சொல்லுவானேன் ?

ஏனென்றால், நாம் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, சர்வேசுரன் அந்த வரங்களையும் நமது ஆத்துமத்தில் பொழிந்தருளுகிறார்.

9. **உறுதிப்பூசுதலைப் பெறக்கூடியவர்கள் யார்?**

ஞானஸ்நானம் பெற்ற எவனும் அதை வாங்கலாம். ஆகையினால் மந்தப்புத்தியின் பொருட்டு புது நன்மை வாங்காதவர்களும் உறுதிப்பூசுதலைப் பெறக்கூடும்.

10. **உறுதிப்பூசுதலைத் தகுந்தவிதமாய் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஆயத்தம் என்ன?**

ஞானஸ்நானம் பெற்றிருப்பதுமல்லாமல், வேதத்தின் பிரதான சத்தியங்களை அறிந்து, சாவான பாவமில்லாமல் இஷ்டப் பிரசாத அந்தஸ்தில் இருக்கவேண்டும்.

11. **உபவாசமாயிருக்க வேண்டியதில்லையா?**

உபவாசமாயிருக்கத் தேவையில்லை.

12 **சாவானபாவத்தோடு உறுதிப்பூசுதலைப் பெற்றால் நேரிடுகிறதென்ன?**

சாவான பாவத்தோடு உறுதிப்பூசுதலைப் பெறுகிறவன், தேவதுரோகத்தைக் கட்டிக்கொண்டு, உறுதிப்பூசுதலால் உண்டாகும் தேவ வரப்பிரசாதங்களை அடையமாட்டான்.

13. **அந்த வரப்பிரசாதங்களை அடைய அவன் மறுபடியும் உறுதிப்பூசுதல் பெறவேண்டுமா?**

ஒருபோதும் அழியாத ஞானமுத்திரை உறுதிப்பூசுதலால் நமது ஆத்துமத்தில் பதிக்கப்பட்டிருக்கிறதினால், அதை மறுபடி பெறவேகூடாது. இரண்டு தடவை பெற்றால், தேவதுரோகமாகும்.

14. **சாவான பாவத்தோடு உறுதிப்பூசுதலைப் பெற்றவன் அதன் வரப்பிரசாதங்களை அடையும்படி செய்யவேண்டியதென்ன?**

அப்பேர்ப்பட்டவன் அடிமை மனஸ்தாபப்பட்டு, பாவசங்கீர்த்தனஞ் செய்தவுடன் அல்லது பாவசங்கீர்த்தனத்துக்குப் போவேனென்னும் ஆசையோடு உத்தமமனஸ்தாபப்பட்டவுடன் உறுதிப்பூசுதலின் தேவ வரப்பிரசாதங்களை அடைவான்.

15. **எப்போது உறுதிப்பூசுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டியது?**

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவுடன், அதையும் அவர்களுக்குக் கொடுக்கும் வழக்கம் பூர்வகாலத்தில் இருந்தது. அந்த வழக்கம் இக்காலத்தில இல்லை. இப்போது வேதசத்தியங்களை அறிந்த ஏழு பிராயமுள்ள சிறுவர், புதுநன்மை வாங்கு முன்னே முதலாய் உறுதிப்பூசுதலைப் பெறலாம். ஆயினும் ஒருவன் மரண ஆபத்திலிருக்கும்போதும், வேறு விசேஷ முகாந்தரமிருக்கும்

போதும், உதாரணமாக: மேற்றிராணிமாராவது உறுதிப்பூசுதலைக் கொடுக்க விசேஷ அதிகாரம்பெற்ற குருவானவராவது நெடுங்காலமாய் வராதிருப்பார் என்று ஏற்கனவே பங்கு சுவாமியார் அறிந்திருந்தால், ஏழு வயதுக்கு முன்னதாகவே உறுதிப்பூசுதலை அவனுக்குக் கொடுப்பார்.

16. மரண ஆபத்திலிருக்கும் புத்திவிவரம் அறியாத பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் கொடுப்பது ஏன்?

அர்ச். அக்வீனு தோமாஸ் படிப்பிக்கிறதுபோல், மோட்சத்தில் அவர்கள் அதிக மகிமையை அடையும்படியாகவேதான்.

17. உறுதிப்பூசுதலைப் பெற்றவனுடைய கடமை என்ன?

அதைப்பெற்ற பிறகு முன்னையைப் பார்க்கிலும் உத்தம கிறீஸ்துவனாய் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

18. உறுதிப்பூசுதலைப் பெறுகிறவர்களுக்கும் ஞானத்தாய் தகப்பன் இருக்கவேண்டுமா?

இருக்கவேண்டும். ஆனால் ஞானஸ்நானம் பெறும் ஒரு குழந்தைக்கு ஒரு ஞானத்தாயும், ஒரு ஞானத்தகப்பனும் இருக்கக்கூடும் என்றாலும் உறுதிப்பூசுதல் பெறும்போதோவெனில் ஒருவர் மாத்திரம் இருக்கவேண்டும்.

19. யார் ஞானத்தாய் ஞானத்தகப்பனாயிருக்கலாம்?

உறுதிப்பூசுதலைப்பெற்ற நல்ல கிறீஸ்துவர்கள். ஆனால் ஆணுக்கு ஒரு ஆண்பிள்ளை ஞானத்தகப்பனாகவும், பெண்ணுக்கு ஒரு பெண்பிள்ளை ஞானத்தாயாகவுமிருக்கவேண்டும்.

(தி. ச. 796. § 2.)

20. யார் ஞானத்தாய் ஞானத்தகப்பனாயிருக்கக்கூடாது?

கெட்ட கிறீஸ்துவர்கள்மட்டுமன்றி, ஒரு பிள்ளையின் ஞானஸ்நான காலத்தில் ஞானத்தாய் ஞானத்தகப்பனாயிருந்தவர்கள் கூட அதே பிள்ளை உறுதிப்பூசுதல் பெறும்போது ஞானத்தாய் ஞானத்தகப்பனாயிருக்கக்கூடாது. (தி. ச 796. § 1.)

21. உறுதிப்பூசுதலால் ஞான சம்பந்தம் உண்டாகுமா?

ஞானஸ்நானத்தில் உண்டாவதுபோல, உறுதிப்பூசுதலைப் பெற்றவனுக்கும் அவனுடைய ஞானத்தாய் அல்லது ஞானத்தகப்பனுக்கும் ஞான சம்பந்தம் உண்டாகும். (தி. ச. 797.) அந்தச் சம்பந்தம் உண்டாகும்படி, அர்ச்சியசிஷ்ட எண்ணெய் பூசும்போது, ஞானத்தாய் தகப்பன் ஞானப்பிள்ளையைத் தொட்டுக்கொண்டிருப்பது அவசியம்.

22. இந்தச் சம்பந்தத்தால் ஞானத்தாய் தகப்பனுக்கு உண்டாகும் கடமைகள் எவை?

ஞானத்தாய் தகப்பன் தமது ஞானப்பிள்ளையின்பேரில் விழிப்பாயிருந்து அவனைக் கத்தோலிக்க படிப்பினையில் விர்த்திக்கச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (தி. ச. 797.)

### 1. இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள்

ஞ. த. 460—ஞ. சி. 219. 495.—M. J. M. IV. 3.—ச. சி. 21.—L. 207.—க. ஞ. 544-546.—D. M. S. 109-113. 307.

†231. [93] அந்த வரப்பிரசாதங்கள் எத்தனை?

ஏழு.

†232. [94] ஏழுஞ் சொல்லு.

1-வது.—ஞானம், 2-வது.—புத்தி, 3-வது.—அறிவு. 4-வது.—விமரிசை, 5-வது.—திடம், 6-வது.—புத்தி, 7-வது.—தெய்வ பயம்.

1. எதற்காக இஸ்பிரீத்துசாந்துவின் வரங்கள் கொடுக்கப்படுகின்றன?

சாவான பாவமில்லாதவர்கள், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலுக்கு அதிக எளிதாயும், சுறுசுறுப்புடனும் இணங்கி, மேலான புண்ணியக் கிரியைகளைச் செய்யும்படியாகவும், தீமையை விலக்கும்படியாகவும் இந்தத் தேவ வரங்கள் நிலையுள்ள விதமாய்க் கொடுக்கப்படுகின்றன.

2. இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களை அதிகரிக்கிறதெப்படி?

நமது ஆத்துமத்தில் தேவ இஷ்டப்பிரசாதம் எவ்வளவுக்கு அதிகரிக்குமோ, அவ்வளவுக்கு இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களும் அதிகரிக்கும்.

3. இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களை எப்படி இழந்துவிடுகிறோம்?

ஒரு சாவான பாவத்தைக் கட்டிக்கொண்ட மாத்திரத்தில், அவைகளையும் இழந்துவிடுகிறோம்.

4 ஞானம் என்கிற வரம் ஆவதென்ன?

ஞானம் என்கிற வரம் சர்வேசுரனையும் அவருக்கடுத்த காரியங்களையும் நன்றாய் அறியும்படியாகவும், மதிக்கவேண்டியபடி மதிக்கும்படியாகவும் நமக்கு உதவிசெய்யும் வரமாம். அவ்வரத்தினாலே நாம் சர்வேசுரனால் அறிவிக்கப்பட்ட சத்தியங்களை ஆவலோடு தேடி அவைகளைச் சுகித்துவருகிறோம்.

5. புத்தி என்பதென்ன ?

வேத சத்தியங்களையும் பரம தேவ இரகசியங்களையும் முதலாய் அதிகமதிகமாய்க் கண்டுபிடிக்கச் செய்யும் வரம். இந்த வரத்தால் சில சமயத்தில் நமது புத்தியில் ஒரு ஞான வெளிச்சம் உண்டாகி, அதைக்கொண்டு நாம் முன்னே உணராமல் வாசித்த ஒரு சத்தியத்தை அல்லது தேவ வாக்கியத்தை திடீரென உணர்ந்து அதில் உருக்கம் அடைகிறோம்.

6. அறிவு ஆவதென்ன ?

சர்வேசுரனுடைய அறிவுக்கு ஒரு விதமாய் நம்மைப் பங்காளிகளாக்கி, அவர் இவ்வுலோக காரியங்களை அறிந்து மதிக்கிற விதமாய் நாமும் அவைகளை மதிக்கச்செய்யும் வரம். இவ்வரத்தினாலே மோட்சம் அடைவதற்கு மாத்திரம் சுவாமி நம்மைப் படைத்தாரென்றும், அதை அடையும்படி வேண்டிய வழிகள் நேரிடக்கூடிய விக்கினங்கள் எவையென்றும் தெளிவாய்க் கண்டுணருகிறோம்.

7. விமரிசை ஆவதென்ன ?

இன்னின்ன நேரத்தில் அல்லது இடத்தில் அல்லது சமயத்தில், சர்வேசுரனுடைய தோத்திரத்துக்கும், நம்முடையவும் பிறருடையவும் ஆத்தும இரட்சணியத்துக்கும் என்ன செய்ய வேண்டுமென்று காட்டும் ஞான வெளிச்சமாம். இவ்வரத்தினால் மிஞ்சின நம்பிக்கைக்கும், தீவிரத்துக்கும் யோசியாமைக்கும், பசாசின் உபாயங்களுக்கும் தப்பித்துக்கொள்ளுகிறோம். இன்னும் யாதொரு ஏவுதலினால் நம்மைத் தூண்டுவது பசாசோ, சம்மனசோ என்று பகுத்தறிகிறோம்.

8. திடம் என்பதென்ன ?

கஷ்டங்களும் விக்கினங்களும் நேரிடும் சமயத்தில், நாம் சுவாமி சித்தத்தின்படி நடக்கவேண்டிய தைரியத்தை நமக்குக் கொடுக்கும் வரமாம். இவ்வரத்தினால் பசாசின் சோதனைகளையும் சகல விக்கினங்களையும் ஜெயித்து, நமது கடமைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றி வருகிறதுமன்றி, வேதத்துக்காக நமது உயிரை முதலாய்க் கொடுக்க அஞ்சமாட்டோம்.

9. பக்தியாவதென்ன ?

சர்வேசுரனையும் வேதத்துக்கடுத்தவைகளையும் தக்க மேரை மரியாதையோடு சங்கிக்கச் செய்யும் வரமாம். இவ்வரத்தினால் சர்வேசுரனைப் பட்சமுள்ள பிள்ளைகளுக்குரிய நேசத்துடன் சிநேகிக்கிறோம்.

10. **தெய்வ பயம் என்பதென்ன ?**

இது எஜமானனுக்கு உழைக்கிற அடிமைகளின் பயமல்ல. நம்மைத் தெய்வீக மகிமை சமுகத்தில் தக்க வணக்கத்தோடு நடக்கச் செய்து, பாவத்தினால் சர்வேசுரனுடைய மனதைப் புண்படுத்தாமல், அஞ்சி நடக்க நம்மைத் தூண்டும் வரம். இவ்வரத்தினால் அற்பப் பாவத்தை முதலாய்ச் செய்ய அஞ்சுகிறோம்.

## 2. இஸ்பிரீத்துசாந்துவின் கனிகள்

1. **இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களால் நமக்கு வரும் பலன்கள் எவை ?**

அவருடைய **ஞானக் கனிகள்.**

2. **அவைகள் எவை ?**

அவைகளாவன : (1) பரம அன்பு ; (2) ஞான சந்தோஷம் ; (3) சமாதானம் ; (4) பொறுமை ; (5) தயை ; (6) நன்மைத்தனம் ; (7) சகிப்பு ; (8) சாந்தம் ; (9) விசுவாசம் ; (10) அடக்க ஒடுக்கம் ; (11) இச்சை அடக்கம் ; (12) நிறை கற்பு ஆகிய இவைகளாம். (கலா. V. 22-23).

3. **இந்தக் கனிகள் எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்படும் ?**

இந்தக் கனிகள் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும். முதல் பாகத்தில் அடங்கிய அன்பு, சந்தோஷம், சமாதானம், சர்வேசுரனுக்கும் ; இரண்டாம் பாகத்தில் அடங்கிய பொறுமை, தயை, நன்மைத்தனம், சகிப்பு, சாந்தம், விசுவாசம், புறத்தியாருக்கும் ; மூன்றாம் பாகத்தில் அடங்கிய அடக்க ஒடுக்கம், இச்சை அடக்கம், கற்பு நமக்கும் சம்பந்தப்பட்டதாகும்.

4. **மேற்கூறிய குணங்களை இஸ்பிரீத்துசாந்துவின் கனிகள் என்று அழைப்பானேன் ?**

ஏனெனில், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலுக்குப் பிரமாணிக்கமாய்க் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கு இந்தக் கனிகள் முன் சம்பாவனையாயிருக்கின்றன.